# <u>பத்திரிகை செய்தி</u>

**<u>செ.வெ.எண்.</u> 23** **நாள் 12.3.2008**

## <u>பொது விநியோகத் திட்ட அரிசி கடத்தலை அடியோடு தடுத்திட மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ. வ. வேலு அவர்கள் நடத்திய மாநில ஆய்வுக் கூட்டம்</u>

மாநிலத்தில் உள்ள குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் தொடர்பாக இன்று (12.03.2008) காலை 10.30 மணிக்கு கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

**2.** குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறையின் துணை கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் இரயில்வே காவல் துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர் ஆகியோர் பங்கு பெற்ற இக்கூட்டத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

**3.** கூட்டத்தை துவக்கிவைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்திற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து மார்ச் 2008க்குள் 1,64,000 மெ.டன் அரிசி விடுவிக்கப்பட உள்ளதால், பொது விநியோகத் திட்ட அரிசியுடன், வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கான அரிசியையும் சேர்த்து அரிசி கடத்தல்காரர்கள் அண்டை மாநிலங்களுக்கு கடத்தி செல்லாமல் மாநில எல்லையோர பகுதிகளில் 24 மணி நேரமும் ரோந்து பணி மேற்கொள்வதுடன், அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதனையும் மீறி லாரிகளில் அரிசி கடத்தப்படுமேயானால்,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, லாரியையும், அரிசியையும் உடனடியாக கைப்பற்றுவதுடன், லாரியின் உரிமம் (Licence) மற்றும் ஓட்டுநரின் உரிமத்தை (Driving Licence) இரத்து செய்ய வேண்டும் என்றும், கன்னியாகுமரி, கோயம்புத்தூர், தேனி, திருவள்ளூர், கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் விடுமுறை நாட்களிலும் இரவு ரோந்து பணி மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

4. மேலும், பொது மக்கள் அரிசி கடத்தல்காரர்கள் பற்றிய விவரங்களையும், போலி குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் பற்றிய விவரங்களையும் மற்றும் பொது விநியோகத் திட்ட அரிசி ஏற்றப்பட்டு செல்லும் லாரிகளின் எண் போகும் வழித்தடங்கள் போன்ற விவரங்களை மாண்புமிகு உணவு அமைச்சர் அலுவலகம் (அலுவலக நேரத்தில்) மற்றும் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை காவல் துறை தலைவர் அலுவலகத்தில் (24 மணி நேரமும்) நிறுவப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு (Control Room) கீழ்க்கண்ட தொலைபேசி மற்றும் நிகரி (Fax) மூலம் தெரிவிக்கலாம். தெரிவிக்கப்படும் புகார் குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| காவல் துறை தலைவர் அலுவலக கட்டுப்பாறை அறை எண் | 24338974 |
| உணவு அமைச்சர் அலுவலக தொலைபேசி மற்றும் நிகரி எண். | 25670204 |

5. கள்ளச்சந்தை தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மாநில அறிவுரைக் கழகத்தினால் விடுவிக்க இயலாத வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். சென்னை உயர்நீதிமன்றத்தில் ஹேபியஸ் கார்ப்பஸ் மனு தாக்கல் செய்து விடுதலை செய்யப்பட்டவர்கள் மீதும் தொடர்ந்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டு கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டப்பிரிவு 7 (1) (a) (ii)ன்படி குற்றப்பத்திரிகை (Chargesheet) தாக்கல் செய்து 7 வருடங்கள் வரை சிறைதண்டனை வழங்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். இதில் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் மிகவும் எச்சரிக்கையுடன்

செயல்பட வேண்டும் என்றும், இதில் ஏதேனும் சிறிய குறைபாடுகள் ஏற்பட்டால் கூட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் எச்சரித்தார்கள்.

6. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955, (E.C. Act. 1955) பிரிவு 6 (a)ன் கீழ் பதிவு செய்யப்படும் அனைத்து வழக்குகளிலும் கடத்தப்படும் அரிசியை மட்டும் கைப்பற்றுவதுடன் தொடர்ந்து குற்றப்பத்திரிகை (Charge Sheet) தாக்கல் செய்து குற்றவியல் நடவடிக்கை தொடர வேண்டும் என்றும், 6.11.2007 அன்று சென்னையில் நடைபெற்ற ஆய்வில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியபடி இன்றியமையாப் பண்டங்கள் சட்டப்பிரிவு 6 (a)ன் கீழ் பதிவு செய்யப்பட்ட 148 வழக்குகள் மற்றும் கள்ளச்சந்தை தடுப்புக்காவல் வழக்குகள் 76லும் குற்றவாளிகள் மீது குற்றப்பத்திரிகை நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டாலும், இத்தகைய வழக்குகளில் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு சட்டப்படி உரிய தண்டனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

7. 2004-ம் ஆண்டு முதல் தொடர்ந்து அரிசி கடத்தலில் ஈடுபட்டும் கடத்தலுக்கு பின்பலமாக செயல்பட்டும் சட்டத்தின் பிடியிலிருந்து இதுவரை தப்பி வந்த 7 முக்கிய நபர்களை கைது செய்துள்ளதற்கு தனது மகிழ்ச்சியை தெரிவித்து, இதேபோல் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பல வருடங்களாக அரிசி கடத்தலில் ஈடுபடும் குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், இரயில், பேருந்து மூலம் அரிசி கடத்துபவர்கள், அரிசி கடத்துபவர்களுக்கு உறுதுணையாக விளங்கும் அரசு அலுவலர்கள், நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள், பேருந்து மினிபஸ், லாரிகள் போன்றவற்றில் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் உபயோகிப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். 2007ம் ஆண்டில் 1621 நபர்கள் கைது செய்யப்பட்டு 892 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 59 நபர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 340 நபர்கள் கைது செய்யப்பட்டு, 155 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 20 நபர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இப்பணி மேலும் தீவிரபடுத்தப்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை செயலாளர் திரு.கே.சண்முகம்,இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை தலைவர் திரு.ஆஸிஸ் பாங்கரா,இ.கா.ப., கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் டாக்டர்.சி.கே.காந்திராஜன்,இ.கா.ப., கோவை சரக காவல் துணை தலைவர் திருமதி.சீமா அகர்வால்,இ.கா.ப., கோயம்புத்தூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு.ஜி.கார்த்திகேயன், குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் கண்காணிப்பாளர் திரு.என்.மயில்வாகனன் ஆகியோர் பங்கு பெற்றனர்.




**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில் குடிமைப்பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத் துறையின் ஆய்வுக் கூட்டம் கோவை மாநகர காவல் துறை ஆணையர் கூட்ட அரங்கில் நடைபெற்றது. அருகில் உணவுத் துறை செயலாளர் திரு.கே.சண்முகம்,இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை தலைவர் திரு.ஆஸிஸ் பாங்கரா,இ.கா.ப., கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் டாக்டர்.சி.கே.காந்திராஜன்,இ.கா.ப., கோவை சரக காவல் துணை தலைவர் திருமதி.சீமா அகர்வால்,இ.கா.ப., ஆகியோர் உள்ளனர்.**

வெளியீடு– செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோவை.